1986 நவம்பர் 18] [பேரவைத் தலைவர்]

எனவே, வேட்பாளர்கள் நியமனத்தாட்களை 19-11-1986 புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 20-11-1986 வியாழக்கிழமை காலை 11-00 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 20-11-1986 வியாழக் கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது மூன்றுக்கு மேற்படுமாயின் 22-11-1986 சனிக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் இருக்கும் குழுக் கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

(இ) கவன ஈர்ப்பு தள்ளிவைக்கப் பெறுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க திரு. செ. செம்மலை அவர்கள் கொடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானம் வேறு ஒரு நாள் எடுத்துக்கொள்ளப்படும்.

4. கவன ஈர்ப்பு.

திருச்சி மாவட்டம், துறையூரில் கதர் வாரிய கண்டசாரி சர்க்கரை ஆலைக்குக் கரும்பு கொடுத்த விவசாயிகளின் பாக்கிகளைத் தீர்த்து வைத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் வி. தங்கவேலு, இரா. தாமரைக்கனி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

(திருவாளர்கள் வி. தங்கவேலு, இரா. தாமரைக்கனி ஆகியோர் இருப்பிடத்தில் இல்லாததால், திரு. என். எஸ். வி. சித்தன் அது குறித்து அமைச்சரின் கவனத்தை ஈர்க்க அனுமதிக்கப் பட்டார்.)

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " திருச்சி மாவட்டம், துறையூரில் கதர் வாரியத்தின் மூலம் இயங்கி வந்த கண்டசாரி சர்க்கரை ஆலைக்குக் கரும்பு கொடுத்த விவசாயிகளுக்குப் பணம் கொடுக்கப்படாத